
**ஜூலை – 28**

# தேசியச் செய்திகள்


## வாக்காளர் தகுதிச் சான்று குறித்து இந்தியத் தேர்தல் ஆணையம்




- வாக்காளர் தகுதிச் சான்றுகள் குறித்து தேர்தல் ஆணையம் (EC) உச்ச நீதிமன்றத்தில் பின்வருவனவற்றை உறுதியளித்தது.
- சிறப்புத் தீவிரத் திருத்தம் (SIR) என்றஒரு நடவடிக்கையின் கீழ் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்ய ஒருவர் தகுதியற்றவர் எனக் கண்டறியப்பட்டால் மட்டுமே அவர் குடி மகனாக இருப்பதற்கான தகுதியினை இழக்க மாட்டார்.
- 2003 ஆம் ஆண்டில் பீகார் மாநில வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே பெயர்கள் இடம் பெற்றுள்ள வாக்காளர்கள், தங்கள் தகுதியை நிரூபிக்க ஆவணங்களை வழங்குவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டதாக அது கூறியது.
- கடைசியான தீவிரத் திருத்தம் 2003 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டது.
- சட்டம் மற்றும் அரசியலமைப்பின் (326) கீழ், "வாக்களிக்கும் அரசியலமைப்பு உரிமையை செயல்படுத்துவதற்காக" குடியுரிமைச் சான்றைக் கோரும் அதிகாரம் என்பது தன்னிடம் இருப்பதாக தேர்தல் ஆணையம் கூறியது.
- வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான 11 குறிகாட்டி ஆவணங்களின் பட்டியலில் ஆதார், வாக்காளர் அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டைகளைச் சேர்ப்பது குறித்து பரிசீலிக்குமாறு தேர்தல் ஆணையத்திடம் உச்ச நீதிமன்றம் கேட்டுக் கொண்ட போதிலும், SIR நோக்கத்திற்காக அவற்றை "தனி ஆவணங்களாக" ஏற்றுக் கொள்ள முடியாது என்று தேர்தல் ஆணையம் கூறியது.
- ஆதார் என்பது வெறும் அடையாளச் சான்று மட்டுமேயாகும்.
- ஆதார் அட்டையிலேயே அது ஒரு குடியுரிமைச் சான்று அல்ல என்ற மறுப்புக் கூற்று உள்ளது.
- "போலி குடும்ப அட்டைகள் பரவலாக வழங்கப்பட்டு வருவதால், அந்த ஆவணம் ஒரு நம்பகத் தன்மையற்றதாக மாறியுள்ளது" என்று தேர்தல் ஆணையம் சுட்டிக் காட்டியது.
- வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை (EPIC) பொறுத்தவரை, அவை வாக்காளர் பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டவை என்று அது நியாயப் படுத்தியது.

## NxtBanking - நிதி சார் தொழில்நுட்பத் தளம்

- லாராவேர் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ஆனது இந்தியாவின் முதல் முழுமையாக செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் நிதிசார் தொழில்நுட்ப மென்பொருள் தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது தொழில்நுட்பக் கண்டுபிடிப்பாளர் அன்வேஷ் திவாரி அவர்களால் உருவாக்கப் பட்டது.
- இது வங்கிகள், வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள், நிதியியல் தொகுப்பு நிறுவனங்கள் மற்றும் நிதி சார் நுட்பப் புத்தாக்க நிறுவனங்கள் நிறுவனத் தர இணக்கம், நிகழ்நேரத் தானியக்கம் மற்றும் மிக வலுவான பாதுகாப்புடன் கூடிய உடனடியான அறிவார்ந்த நிதியியல் சேவைகளை வழங்க உதவுகிறது.




## பாரத் NCX 2025




- குஜராத் மாநிலத்தின் காந்தி நகரில் இராஷ்ட்ரிய ரக்சா பல்கலைக்கழகத்துடன் (RRU) இணைந்து 2025 ஆம் ஆண்டு பாரத் தேசிய இணைய வெளிப் பாதுகாப்பு பயிற்சி (பாரத் NCX 2025) தொடங்கப்பட்டது.
- இந்தப் பயிற்சியின் கருத்துரு, 'Enhancing the Operational Preparedness of Indian Cyberspace' என்பதாகும்.
- இந்தப் பயிற்சியானது இந்திய இணைய வெளியின் செயல்பாட்டுத் தயார்நிலையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

## இந்தியாவிற்கான AI 2.0

- கல்வி மற்றும் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் ஆனது இந்தியாவிற்கான AI 2.0 திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது 2023 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் தேதியன்று உலக இளையோர் திறன்கள் தினத்தில் தொடங்கப்பட்ட ஓர் இலவச இயங்கலை வழி செயற்கை நுண்ணறிவு (AI) பயிற்சித் திட்டமாகும்.
- இந்த திட்டமானது திறன் இந்தியா மற்றும் GUVI ஆகியவற்றின் கூட்டு முன்னெடுப்பு ஆகும்.
- இந்தியாவிற்கான AI 2.0 ஆனது, குறிப்பாக கிராமப்புற இளைஞர்களுக்கு, அணுகலை மேம்படுத்துவதற்காக வேண்டி ஒன்பது இந்திய மொழிகளில் நிபுணத்துவம் வாய்ந்த செயற்கை நுண்ணறிவுத் திறன் பயிற்சியை வழங்குகிறது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் நிறுவப்பட்ட புத்தொழில் நிறுவனமான GUVI, எண்ணிம வழி உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதற்காக வட்டார மொழிகளில் தொழில்நுட்பக் கற்றல் தளங்களை வழங்குகிறது.
- நாடு முழுவதும் மிகவும் ஒரு அதிநவீனமான தொழில்நுட்பக் கல்விக்கான அணுகலை விரிவுபடுத்துவதன் மூலம், எதிர்காலத்திற்கு ஏற்ற இந்தியாவின் இளையோர்களை (யுவ சக்தி) மேம்படுத்துவதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.




## மாசுக் கட்டுப்பாட்டு கப்பல் சமுத்திர பிராச்செட்

- கோவா கப்பல் கட்டும் நிறுவனம் (GSL) ஆனது, கோவாவில் சமுத்திர பிராச்செட் எனப்படும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இரண்டாவது மாசுக் கட்டுப்பாட்டு கப்பலினை (PCV) அறிமுகப்படுத்தியுள்ளது.
- சமுத்திர பிராச்செட் கப்பலானது, 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட சமுத்திர பிரதாப் எனும் முதல் PCV கப்பலினை அடுத்து அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.
- இந்தக் கப்பலானது எண்ணெய்க் கசிவுகளை சேகரிப்பதற்கான இரண்டு பக்கவாட்டு தூர்வாரும் ஆயுதங்கள், எண்ணெய் படலங்களைக் கண்டறிவதற்கான நவீன ரேடார் கருவி மற்றும் மீட்கப்பட்ட எண்ணெயைக் கப்பலின் குழை வழியே ஏற்றி, பகுப்பாய்வு செய்து, பிரித்துச் சேமிப்பதற்கான உபகரணங்களைக் கொண்டுள்ளது.
- இந்தக் கப்பலானது, சுமார் 72% அளவு உள்நாட்டு உள்ளடக்கத்துடன் GSL நிறுவனத்தால் முழுமையாக வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப்பட்டது.




## தேசிய நெருக்கடி மேலாண்மைக் குழு





- இந்திய அரசானது புதிதாகத் திருத்தப்பட்ட 2025 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் (திருத்தம்) சட்டத்தின் கீழ் தேசிய நெருக்கடி மேலாண்மைக் குழுவை (NCMC) அமைத்து உள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 09 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் இந்தத் திருத்தப்பட்ட சட்டம் ஆனது, NCMC உள்ளிட்ட முக்கிய அமைப்புகளுக்குச் சட்டப்பூர்வ அந்தஸ்தை வழங்குகிறது.
- 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டத்திற்கு முன்னதாகவே NCMC முறை சாரா அமைப்பாகச் செயல்பட்டது.
- ஜூலை 23 ஆம் தேதியன்று, உள்துறை அமைச்சகமானது 2025 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மை தேசிய நெருக்கடி மேலாண்மைக் குழு (செயல்முறை) விதிகளை வெளியிட்டது.
- தேசிய அளவிலான விளைவுகளுடன் கூடிய பேரிடர்களைக் கையாள்வதற்கானப்

பொறுப்பினை கொண்ட உச்ச நிலை அமைப்பாக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

❖ இந்தக் குழுவானது எந்தவொரு அச்சுறுத்தும் அல்லது அதிகரித்து வரும் பேரிடர் சூழ்நிலைக்குமான தயார்நிலையை மதிப்பிட்டு, எதிர் நடவடிக்கை எடுப்பதற்கான திறன்களை வலுப்படுத்த தேவையான வழிமுறைகளை வெளியிடும்.

## NIRDPR விலகல்




❖ ஐதராபாத்தில் உள்ள தேசியக் கிராமப்புற மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனத்திலிருந்து (NIRDPR) விலக கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் (MoRD) முடிவு செய்துள்ளது.

❖ இந்த நடவடிக்கையானது தேசியக் கிராமப்புற மேம்பாட்டு முன்னுரிமைகளிலிருந்து ஓர் அடிப்படை மாறுதலைக் குறிக்கிறது என்று பாராளுமன்ற நிலைக்குழு கூறியது.

❖ NIRDPR ஆனது கிராமப்புற அதிகாரிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் சமூக அமைப்புகளின் திறன்களை மேம்படுத்துவதற்காக உலகளவில் அங்கீகரிக்கப் பட்டுள்ள நிறுவனமாகும்.

❖ அதனுடனான பல்வேறு இணைப்புகளைத் துண்டிப்பது NIRDPR நிறுவனத்தின் நம்பகத் தன்மையைச் சேதப்படுத்தும் என்றும் அதன் நீண்ட கால ஆராய்ச்சியைப் பலவீனப் படுத்தும் மற்றும் குறுகிய காலப் பணிகளுக்கு கவனம் செலுத்தும் என்றும் அக்குழு எச்சரித்தது.

❖ "The minimum government and the maximum governance - அரசாங்கத்தின் குறைந்தபட்சத் தலையீடு, அதிகபட்ச நிர்வாகம்" என்ற அரசாங்கத்தின் கோருதலானது அதன் சிறப்புத் தன்மைக்கு தீங்கு விளைவிக்கும் என்றும் அது கூறியது.

❖ இக்குழுவானது வலுவான ஒத்துழைப்பு, கட்டமைப்புச் சீர்திருத்தங்கள், பரவலாக்கப் பட்ட முடிவெடுத்தல், அதிக சுயாட்சி மற்றும் போதுமான நிதியுதவி ஆகியவற்றைப் பரிந்துரைத்தது.

- மிகவும் முக்கிய நிர்வாகப் பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு குழுவை அமைக்க அது MoRD அமைச்சகத்தினை வலியுறுத்தியது மற்றும் நிலைத் தன்மை மீட்டெடுக்கப்படும் வரை அரசாங்க மானியங்கள் தொடர்வதுடன் உடனடியான தலைமைத்துவ மாற்றத்திற்கும் அது அழைப்பு விடுத்தது.

## இந்தியா - ஐக்கியப் பேரரசு தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

- 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கையெழுத்தான இந்தியா-ஐக்கியப் பேரரசு தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (FTA) ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் இருதரப்பு வர்த்தகத்தினை இரட்டிப்பாக்கி 120 பில்லியன் டாலராக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஒப்பந்தமானது, ஐக்கியப் பேரரசிற்கான இந்திய ஏற்றுமதிகளில் 99% மீதான வரிகளை நீக்குகிறது மற்றும் பத்து ஆண்டுகளுக்குள் 85% பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுவதுடன் இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படும் 90% ஐக்கியப் பேரரசு பொருட்களின் மீதான வரிகளைக் குறைக்கிறது.
- இது இந்தியாவின் ஏற்றுமதியை ஆண்டுதோறும் 5 பில்லியன் டாலர் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- பல இந்தியத் தயாரிப்புகள் மீதான 4% முதல் 70% வரையிலான வரிகளை ஐக்கியப் பேரரசு நீக்கியது.
- இது குறிப்பாக குஜராத், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் உள்ள கிராமப்புற மற்றும் சிறு தொழில்களை ஆதரிக்கும்.
- இந்த ஒப்பந்தமானது, ஜவுளி ஏற்றுமதியில் மட்டும் 5 பில்லியன் டாலர் லாபம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் வங்காளதேசம் மற்றும் வியட்நாம் போன்ற போட்டி நாடுகளுக்கு எதிராக இந்திய ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் துறையின் போட்டித் தன்மையை அதிகரிக்கிறது.
- சுமார் 16% வரை வரிகளை நீக்குவதன் மூலம் தோல் பொருட்கள் மற்றும் காலணி ஏற்றுமதிகள் அதிகரிக்கும்.
- இரத்தினக் கற்கள் மற்றும் நகை ஏற்றுமதிகள் வரிகள் இல்லாமல் மேற்கொள்ளப் படுகின்றன.
- பொறியியல் பொருட்கள், வாகனக் கூறுகள், இயந்திரக் கூறுகள் மற்றும் கரிம ரசாயனங்கள் ஆகியவை வரி நீக்கத்தால் பயனடைகின்றன.
- இந்த ஒதுக்கீட்டின் கீழ் வாகனங்களுக்கான/ஆட்டோமொபைல்களுக்கான வரிகள் 100 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்த நிலையில் இருந்து 10% ஆகக் குறைக்கப் பட்டு உள்ளன என்பதோடு இது இந்திய வாகன பாகங்கள் மற்றும் இயந்திர ஏற்றுமதிகளுக்கு உதவுகிறது.
- இறால் மற்றும் உறைந்த/பதப்படுத்தப்பட்ட இறால் போன்ற கடல்சார் பொருட்களின் ஏற்றுமதிகள் வரிகள் இல்லாமல் இயங்குகின்றன என்பதோடு இது 5.4 பில்லியன் டாலர் மதிப்பிலான ஐக்கியப் பேரரசு சந்தைக்கு வாய்ப்பளித்து கேரளா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஒடிசாவில் உள்ள கடலோரச் சமூகங்களுக்குப் பயனளிக்கிறது.
- வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள் ஆனது 95% பொருட்களுக்கு வரி இல்லாத அணுகலைப் பெறுகின்றன.
- ஐக்கியப் பேரரசு ஆனது 99.3% விலங்கு பொருட்கள், 100% கடல் சார் பொருட்கள் மற்றும் இரசாயனங்கள், நெகிழிகள், மின் இயந்திரங்கள் மற்றும் அடிப்படை உலோகங்கள் போன்ற முக்கியத் தொழில்துறைப் பொருட்களுக்கான வரிகளை நீக்குகிறது, சந்தை

அணுகலை விரிவுபடுத்துகிறது மற்றும் வர்த்தகச் செலவுகளைக் குறைக்கிறது.




## 20 சதவிகித எத்தனால் கலப்பு சாதனை





- 2030 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட ஐந்து ஆண்டுகளுக்கு மிகவும் முன்னதாகவே, 2025 ஆம் ஆண்டில் இந்தியா பெட்ரோலில் 20% எத்தனால் கலப்பு என்ற இலக்கினை எட்டியுள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் 1.5% ஆக நிர்ணயிக்கப்பட்ட எத்தனால் கலப்பு இலக்கானது 2025 ஆம் ஆண்டில் 20% ஆக உயர்ந்தது என்பதோடு இது 11 ஆண்டுகளில் சுமார் 13 மடங்கு வளர்ச்சியைக் காட்டுகிறது.
- 2014 ஆம் ஆண்டில் 38 கோடி லிட்டராக இருந்த எத்தனால் உற்பத்தியானது 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 661.1 கோடி லிட்டராக அதிகரித்துள்ளது.
- கச்சா எண்ணெய் இறக்குமதியைக் குறைப்பதன் மூலம் சுமார் 1.36 லட்சம் கோடி

ரூபாய் அந்நியச் செலாவணி சேமிக்கப்பட்டது.

- உயிரி எரிபொருள் துறையை ஆதரிப்பதன் மூலம் சுத்திகரிப்பு மையங்களுக்கு 1.96 லட்சம் கோடி ரூபாய் செலுத்தப்பட்டது.
- விவசாயிகளுக்கு 1.18 லட்சம் கோடி ரூபாய்கள் வழங்கப்பட்டதன் மூலம் கிராமப்புற வருமானம் மற்றும் வேளாண்மையின் நிலைத்தன்மையை வலுப்படுத்தியது.
- சுற்றுச்சூழல் நன்மைகளில் 698 லட்சம் டன் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வினைக் குறைத்தல், தேசியப் பருவநிலை உறுதிமொழிகளுக்கு உதவுதல் ஆகியவை அடங்கும்.
- எத்தனால் முதன்மையாக கரும்பு மற்றும் கரும்பஞ்சாற்றுக் கசடு பெறப்படுவதால், இத்திட்டத்தினை நேரடியாக இந்திய வேளாண் பொருளாதாரத்துடன் இணைக்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## GENIUS சட்டம் 2025




- அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையானது GENIUS சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.
- இது அமெரிக்க டாலருடன் இணைக்கப்பட்ட ஸ்டேபிள் காயின்களுக்கான (நிலையான எண்ணிம நாணயங்கள்) அமெரிக்காவின் முதல் கூட்டாட்சிக் கட்டமைப்பாகும்.
- ஸ்டேபிள்காயின் மசோதாவானது, பங்குகளின் உரிமத்துவ வழங்கலானது (டோக்கன்) அமெரிக்க டாலர்கள் மற்றும் குறுகிய கால கருவூல ரசீதுகள் போன்ற நிலையற்றத் தன்மை கொண்டச் சொத்துக்களின் பின்னணியில் வழங்கப்பட வேண்டும் என்று கோருகிறது.
- ஸ்டேபிள்காயின்கள் என்பது நிலையான மதிப்பைப் பேணுவதற்காக வடிவமைக்கப் பட்ட ஒரு வகை இணைய சங்கேதப் பணமாகும் (கிரிப்டோகரன்சி) ஆகும்.
- இவை மிகவும் பொதுவாக பங்குகளின் உரிமங்களுக்கு இடையில் நிதியை பரிமாற்ற இணைய சங்கேதப் பண வர்த்தகர்களால் பயன்படுத்தப்படுகின்றன.
- இது இணைய சங்கேதப் பணத் துறைக்கு ஒரு முக்கியப் படி நிலையைக் குறிக்கிறது.
- அந்தச் சபையானது மேலும் இரண்டு இணைய சங்கேதப் பண மசோதாக்களையும் நிறைவேற்றியது.
- அதில் ஒன்று தெளிவுச் சட்டம் என்று அழைக்கப்படுகின்ற, எண்ணிம/டிஜிட்டல் சொத்துக்களுக்கான பரந்த ஒழுங்குமுறை கட்டமைப்பை உருவாக்குகின்ற சட்டம் ஆகும்.

- மற்றொன்று அமெரிக்க மத்திய வங்கியின் எண்ணிம/டிஜிட்டல் நாணயத்தைத் தடை செய்யும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## 6 கோடி அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகைப் பாதிப்பு பரிசோதனை





- தேசிய அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை திட்டத்தின் கீழ் மொத்தம் ஆறு கோடி நபர்களுக்கு அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை நோய் பரிசோதனை செய்யப் பட்டுள்ளது.
- சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி இந்தத் தகவல் கூறப்படுகிறது.
- மத்தியப் பிரதேசம், குஜராத், இராஜஸ்தான், தெலுங்கானா, கர்நாடகா மற்றும் உத்தர காண்ட் உள்ளிட்ட சில மாநிலங்கள் தங்கள் இலக்குகளுடன் ஒப்பிடும் போது அதிக சதவீதப் பரிசோதனையை அடைந்தன் மூலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன.
- ஒடிசா, சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களில் கண்டறியப் பட்ட நோய்ப் பரிசோதனைகள் மிகவும் அதிக எண்ணிக்கையில் பதிவாகி உள்ளன.
- தேசிய அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை ஒழிப்பு இயக்கம் ஆனது 2023 ஆம் ஆண்டில் மத்தியப் பிரதேசத்தின் ஷாதோலில் பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்த இயக்கம் ஆனது பாதிக்கப்பட்ட பழங்குடியினப் பகுதிகளில் 0 முதல் 40 வயது வரையிலான ஏழு கோடி நபர்களுக்கு அனைவருக்குமானப் பரிசோதனை வழங்கல் மூலம் 2047 ஆம் ஆண்டிற்குள் நாட்டிலிருந்து அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை பாதிப்பினை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நட்சத்திரம் HOPS - 315

- ஓரியன் விண்மீன் திரளில் உள்ள HOPS-315 எனும் புதிய நட்சத்திரத்தினைச் சுற்றி ஆரம்ப கால கிரக உருவாக்கத்தை வானியலாளர்கள் கவனித்துள்ளனர்.
- நாசா ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி மற்றும் அட்டகாமா பெரிய மில்லி

மீட்டர்/துணை மில்லிமீட்டர் அரே (ALMA) நோக்குக் கூடம் ஆகியவை பாறையிடை நீராவி குளிர்ச்சியடைந்து படிகங்களை உருவாக்குவதைக் கண்டறிந்தன.

- புதனின் சுற்றுப்பாதையில், நட்சத்திரத்தின் 2.2 வானியல் அலகுகளுக்குள் (AU) படிக சிலிகேட்டுகள் மற்றும் சிலிக்கான் மோனாக்சைடு வாயு காணப்பட்டன.
- இம்மாதிரிகள் ஆனது தூசி ஆவியாகத் தொடங்கி பின்னர் திட தாதுக்களாக மீண்டும் ஒடுங்குகின்ற பகுதியில் சுமார் 1,300 கெல்வின் வெப்பநிலை காணப் படுவதை உறுதிப்படுத்தின.
- ஃபார்ஸ்டரைட் மற்றும் என்ஸ்டாடைட் போன்ற கனிமங்கள் பூமியில் காணப்படும் ஒரு பழமையான விண்கற்களில் காணப்பட்டவற்றுடன் பொருந்தின.
- வட்டின் மேலெழும்பும் வளிமண்டலத்தில் உருவானப் படிகங்கள், ஆரம்பகாலத் திடப் பொருள் உருவாக்கத்தை உறுதிப்படுத்துகின்றன.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## லந்தானா கமாரா

- லந்தானா கமாரா தற்போது ஓர் ஊடுருவல் அயல் இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது (சுற்றுச்சூழல்/பொருளாதாரத் தீங்கு விளைவிக்கும் பூர்வீகமற்ற இனங்கள்).
- இது ஒரு வெப்ப மண்டல களை இனமாகும் என்பதோடு இது மத்திய மற்றும் தென் அமெரிக்காவின் வெப்ப மண்டல மற்றும் துணை வெப்ப மண்டலப் பகுதிகளுக்குச் சொந்தமானது.
- இது முதன்முதலில் 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் ஓர் அலங்காரத் தாவரமாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- இமாச்சலப் பிரதேசத்தில், இது தற்போது பதிவு செய்யப்பட்ட வனப்பகுதியில் சுமார் 3,25,282 ஹெக்டேர் (3,252.82 சதுர கி.மீ) பரப்பளவில் பரவியுள்ளது.
- 2010–11 மற்றும் 2015–16 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப ஆய்வுகள் தர்ம ஷாலா, நஹான், ஹமீர்பூர், சம்பா, பிலாஸ்பூர், மண்டி மற்றும் சிம்லா ஆகிய ஏழு வன வட்டங்களில் 2,35,491.93 ஹெக்டேர் பரப்பளவில் பரவி இருப்பதைக் காட்டியது.
- இந்தக் களைச் செடிகள் அடர்த்தியான புதர் வலையமைப்புகளை உருவாக்குகின்றன,

என்பதோடு மிகப் பெரும்பாலும் அரிதான மரப் பரவலுடன் இவை வன விளிம்புகளை விஞ்சுகின்றன.

- லந்தானா தாவர நச்சு வேதிகளை (அலெலோகெமிக்கல்) (வளர்ச்சியைத் தடுக்கும் சேர்மங்கள்) வெளியிடுவதால், அது மற்றத் தாவர இனங்களின் பெரும் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது மற்றும் பூர்வீகத் தாவரங்களை அழிக்கிறது.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## 26வது NeSDA முன்னேற்ற அறிக்கை


- நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொது மக்கள் குறை தீர்வுத் துறையானது (DARPG - Department of Administrative Reforms & Public Grievances) 26வது தேசிய இணைய வழி ஆளுகைச் சேவை வழங்கல் மதிப்பீட்டின் (National e-Governance Service Delivery Assessment - NeSDA) முன்னேற்ற அறிக்கையை வெளியிட்டது.
- இது இந்தியாவின் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் (UTs) முழுவதுமான இணைய வழி ஆளுகைச் சேவை வழங்கலின் நிலையை விவரிக்கிறது.
- இந்த அறிக்கையானது எண்ணிம வழி நிர்வாகம் மற்றும் குடிமக்கள் சேவை அணுகலில் பெரும் முன்னேற்றத்தைக் குறிக்கிறது.
- பதினொரு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் கட்டாய இணைய வழியான ஆளுகை சேவை வழங்கலில் 90% நிறைவு நிலையினைத் தாண்டியுள்ளன.
- மகாராஷ்டிரா, குஜராத், கேரளா, மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், உத்தரகாண்ட், தமிழ்நாடு மற்றும் இமாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட ஒன்பது மாநிலங்கள் 100% நிறைவு நிலையினை எட்டியுள்ளன.
- அசாம், ஜம்மு & காஷ்மீர், கர்நாடகா, கேரளா, ஒடிசா மற்றும் உத்தரகாண்ட் ஆகியவை சேவா சேது, e-UNNAT, சேவா சிந்து, e-Sevanam, ஒடிசா ஒன் மற்றும் அபுனி சர்க்கார் போன்ற இணைய தளங்கள் மூலம் அனைத்துச் சேவைகளையும் வழங்குகின்றன.
- மகாராஷ்டிராவின் சேவை உரிமை ஆணையம் ஆனது சேவை வழங்கல் மற்றும் குடி மக்கள் திருப்தியை மேம்படுத்துவதற்கானப் பெரும் மாறுதல் மிக்க நடவடிக்கைகளை செயல்படுத்தி யுள்ளது.
- திரிபுராவின் SWAAGAT தளமானது ஒரு சிறந்த நடைமுறை சார்ந்த எடுத்துக்காட்டாகக்

குறிப்பிடப் பட்டுள்ளது.

- சூரத் மற்றும் சிம்லாவில் உள்ள நகரத்தின் இணைய தளங்கள் நகராட்சி மட்டத்தில் எண்ணிமமயமாக்கலின் தாக்கத்தை நிரூபிக்கின்றன.
- இந்த அறிக்கையில் வட கிழக்கு மற்றும் மலைப்பாங்கான மாநிலங்களுக்கு என்று பயன்படுத்தப் படும் AAKLAN என்ற மதிப்பீட்டுக் கருவியின் முடிவுகள் அடங்கும்.




## நிதி உள்ளடக்கக் குறியீடு 2025





- 2025 ஆம் நிதியாண்டிற்கான (FY) நிதி உள்ளடக்க (FI) குறியீடு 67 சதவீதமாக மேம்பட்டு உள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.
- இது 2024 ஆம் நிதியாண்டில் பதிவு செய்யப்பட்ட 64.2 சதவீதத்திலிருந்து ஒரு அதிகரிப்பு ஆகும்.

- இந்த அதிகரிப்புக்கு அதிக பயன்பாடு, மேம்பட்ட தரம் மற்றும் நிதி உள்ளடக்கத்தினை அதிகரிக்கும் தொடர்ச்சியான நிதிக் கல்வியறிவு முயற்சிகள் காரணமாகும்.
- பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்து இந்திய ரிசர்வ் வங்கியால் உருவாக்கப்பட்ட கூட்டு நிதி உள்ளடக்கக் குறியீடு முதன்முதலில் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், மார்ச் மாதத்தில் முடிவடையும் 2021 ஆம் நிதியாண்டிற்காக வெளியிடப்பட்டது.
- வங்கிகள், முதலீடுகள், காப்பீடு, அஞ்சல் சேவைகள் மற்றும் ஓய்வூதியங்களிலிருந்து தரவை உள்ளடக்கிய இந்தக் குறியீடு, இந்தியாவில் நிதி உள்ளடக்கம் பற்றிய விரிவான கண்ணோட்டத்தினை வழங்குகிறது.

### ஹென்லே கடவுச் சீட்டுக் குறியீடு 2025

- 2024 ஆம் ஆண்டில் 85வது இடத்தில் இருந்த இந்தியா 2025 ஆம் ஆண்டு ஹென்லே கடவுச் சீட்டுக் குறியீட்டில் 77 வது இடத்தைப் பிடித்தது.
- ஜப்பான் நுழைவு இசைவு சீட்டு இல்லாமல் 193 நாடுகளுக்குப் பயணிக்கும் வகையான அணுகலுடன் தொடர்ந்து முதலிடத்தைப் பிடித்துள்ளது, அதைத் தொடர்ந்து சிங்கப்பூர் மற்றும் தென் கொரியா ஆகியவை உள்ளன.
- முன்கூட்டிய நுழைவு இசைவு சீட்டு இல்லாமல் 27 இடங்களுக்கு மட்டுமே அணுகக் கூடிய ஆப்கானிஸ்தான் இந்தக் குறியீட்டில் கடைசி இடத்தில் உள்ளது.




## மாநிலச் செய்திகள்

### பால் மானியத் திட்டம் – அசாம்

- மாநிலத்தில் பால் துறையை மேம்படுத்தும் முயற்சியில், விவசாயிகளுக்கு ஒரு லிட்டர் பாலுக்கு 5 ரூபாய் மானியம் வழங்குவதற்காக அசாம் மாநில அரசு பால் மானியத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- அசாமில் உள்ள புராபி மற்றும் சீதாஜகலா போன்ற கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பால் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.
- பஞ்சாபரி ஆலை வடகிழக்கில் உள்ள மிகப்பெரிய பால் பதப்படுத்தும் மையம் ஆகும்.
- இது மேற்கு அசாம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தினால் (WAMUL) புராபி பால் பிராண்ட் என்ற தயாரிப்புப் பெயரில் இயக்கப்படுகிறது.




## இந்தியாவின் மிகப்பெரிய பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலை





- L&T நிறுவனம், ஹரியானாவின் பானிபட்டில் உள்ள இந்தியன் எண்ணெய் உற்பத்திக் கழகத்தில் (IOCL) இந்தியாவின் மிகப்பெரிய பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலையை அமைக்க உள்ளது
- இந்தத் திட்டம் சொந்தமாக உருவாக்கி இயக்குதல் (BOO - build-own-operate) என்ற ஒரு அடிப்படையில் செயல்படும்.
- இது இந்தியன் எண்ணெய் உற்பத்திக் கழகத்திற்கு 25 ஆண்டுகளுக்கு ஆண்டுதோறும்

10,000 டன் பசுமை ஹைட்ரஜனை வழங்கும்.

- இந்த முன்னெடுப்பானது மத்திய அரசின் தேசிய பசுமை ஹைட்ரஜன் உற்பத்தித் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
- மேலும் இது IOCL நிறுவனத்தின் சுத்திகரிப்புச் செயல்பாடுகளை கரிம நீக்கல் செய்யவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆலை புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்தி 24 மணி நேரமும் செயல் படும்.
- மேலும் இது குஜராத்தில் உள்ள ஹசிரா ஆலையில் L&T எலக்ட்ரோலைசர்ஸ் லிமிடெட் நிறுவனம் தயாரித்த அதி உயர் அழுத்தக் கார மின்னாற்பகுப்பிகளைக் கொண்டு உள்ளது.
- இந்தத் திட்டம் இந்தியாவில் ஒரு சுயச் சார்பு மற்றும் குறைந்த கார்பன் தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான ஒரு குறிப்பிடத் தக்கப் படியாகும்.

## கோர்பியா சூரிய சக்தி நிலையத் திட்டம்




- இராஜஸ்தானின் பிகானேரில் உள்ள நோகாவில் 435 மெகாவாட் திறன் கொண்ட கோர்பியா சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையமானது எட்டு மாதங்களுக்குள் முடிக்கப் பட்டது.
- இது ஆண்டுதோறும் மணிக்கு 755 ஜிகாவாட் (GWh) மின்சாரத்தை உற்பத்தி செய்யும், சுமார் 128,000 வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும்.
- இந்தத் திட்டமானது ஒவ்வோர் ஆண்டும் சுமார் 705,000 டன் கார்பன் டை ஆக்சைடு ($CO_2$) வெளியேற்றத்தைக் குறைக்கும்.
- இராஜஸ்தானின் மொத்தப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் 35.4 ஜிகாவாட் (GW) திறனை விட அதிகமாகும் என்பதோடு இதில் 29.5 ஜிகாவாட் சூரிய சக்தியிலிருந்தும் 5.2 ஜிகாவாட் காற்றாலை மூலங்களிலிருந்தும் கிடைக்கிறது.
- இந்தியா அதன் மொத்த நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறனில் 50 சதவீதத்தைப் புதை படிவமற்ற மூலங்களிலிருந்தும், 2030 ஆம் ஆண்டு இலக்கை விட ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே அடைந்துள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## லீஷரின் உலகின் சிறந்த விருதுகள் கணக்கெடுப்பு 2025




- ❖ மும்பையில் உள்ள சத்ரபதி சிவாஜி மகாராஜ் சர்வதேச விமான நிலையம் (CSMIA) என்பது விமானப் பயணம் + லீஷரின் 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் மிகச் சிறந்த விருதுகள் கணக்கெடுப்பில் 9வது இடத்தைப் பிடித்தது.
- ❖ முதல் 10 இடங்களில் உள்ள ஒரே இந்திய விமான நிலையம் இதுவாகும், மேலும் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்த இடத்தைப் பெற்றுள்ளது.
- ❖ இஸ்தான்புல் விமான நிலையம் (துருக்கி) முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து சாங்கி விமான நிலையம் (சிங்கப்பூர்) மற்றும் ஹமாத் சர்வதேச விமான நிலையம் (கத்தார்) இரண்டாவதாகவும் உள்ளன.
- ❖ CSMIA ஆனது உலகின் மிகவும் பரபரப்பான ஒற்றை ஓடுபாதை விமான நிலையமாகும், இது தினமும் சுமார் 1,000 விமானப் போக்குவரத்து இயக்கங்களைக் கையாளுகிறது.
- ❖ இந்த விமான நிலையமானது 2024–25 ஆம் நிதியாண்டில் சுமார் 55.12 மில்லியன் விமானப் பயணிகளைப் பதிவு செய்துள்ளது.

# இதரச் செய்திகள்

## மேரி பஞ்சாயத்து செயலி

- ❖ இந்தச் செயலியானது 2025 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க உலகத் தகவல் சங்க உச்சி மாநாட்டின் (WSIS) சாம்பியன் விருது வழங்கப்பட்டு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- ❖ இது கலாச்சாரப் பன்முகத் தன்மை மற்றும் அடையாளம், மொழியியல் பன்முகத் தன்மை மற்றும் வட்டார உள்ளடக்கம் என்ற செயல்வரிசைப் பிரிவின் கீழ் வழங்கப்

பட்டது.


❖ இந்த விருதானது 2025 ஆம் ஆண்டு WSIS+20 உயர்நிலை நிகழ்வின் போது வழங்கப் பட்டது.

❖ இது சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தால் (ITU) ஏற்பாடு செய்யப்பட்டது.

❖ இது முன்னதாக புது டெல்லியில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் ஒன்றியப் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் எனப்படும் லாலன் சிங்கிற்கு வழங்கப்பட்டது.

❖ இந்தச் செயலியானது எண்ணிம வழிமுறைகள் மூலம் குடிமக்களை மையமாகக் கொண்ட நிர்வாகத்தை முன்னேற்ற உதவியுள்ளது.

❖ இது இந்தியாவின் 2.65 லட்சம் கிராமப் பஞ்சாயத்துகளில் 25 லட்சத்திற்கும் மேற்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகள் மற்றும் சுமார் 950 மில்லியன் கிராமப்புறக் குடியிருப்பாளர்களுக்கு அதிகாரத்தினை அளிக்கிறது.




❖ இது பஞ்சாயத்து அமைப்புகளின் நிதி ஒதுக்கீடுகள், வரவுகள், கொடுப்பனவுகள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள், தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகள், பொது உள் கட்டமைப்பு மற்றும் குடிமைச் சேவைகள் பற்றிய விவரங்களின் நிகழ்நேர அணுகலை வழங்குகிறது.

❖ இந்தச் செயலியானது கிராமப் பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டங்கள் (GPDPs), திட்டக் கண்காணிப்பு, கிராமப் பஞ்சாயத்து மட்டத்தில் வானிலை முன்னறிவிப்புகள், சமூகத் தணிக்கைக் கருவிகள், நிதிப் பயன்பாட்டுத் தரவுகள் மற்றும் புவி சார் குறியிடப்பட்ட மற்றும் புவிசார் மேம்பாட்டு அணுகல் அம்சங்களுடன் குறை தீர்க்கும் வசதிகளையும் வழங்குகிறது.

❖ இது 12க்கும் மேற்பட்ட இந்திய மொழிகளில் இயங்குகிறது.

❖ இந்தச் செயலியானது அதன் பன்மொழி இடைமுகம் மூலம் உள்ளடக்கத்தை உறுதி செய்கிறது.

❖ இதில் குடிமக்கள் புதியத் திட்டங்களை முன்மொழியலாம், செயல்படுத்தப்பட்டப் பணிகளை மதிப்பாய்வு செய்து மதிப்பிடலாம் மற்றும் கிராம சபை நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் முடிவுகளை அணுகலாம்.

- இது கிராமப்புற நிர்வாகத்தில் மக்களின் அதிக ஈடுபாட்டையும் வெளிப்படைத் தன்மையையும் மேம்படுத்துகிறது.
- WSIS+20 உயர்நிலை நிகழ்வு ஆனது ஜூலை 07 முதல் 11 ஆம் தேதி வரையில் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்றது.
- இது முதல் WSIS அமைப்பின் இருபது ஆண்டுகள் நிறைவைக் குறிக்கிறது.
- இது ITU மற்றும் சுவிஸ் கூட்டமைப்பு ஆகியவற்றால் இணைந்து நடத்தப் பட்டது.
- இது ITU, ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (UNESCO - United Nations Educational, Scientific and Cultural Organization), ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் (UNDP - United Nations Development Programme) மற்றும் வர்த்தகம் மற்றும் மேம்பாடு குறித்த ஐக்கிய நாடுகள் மாநாடு (UNCTAD - United Nations Conference on Trade and Development) ஆகியவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப் பட்டது.
- இந்த மன்றம் உள்ளடக்கிய தகவல் சமூகத்தினை உருவாக்குவதில் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கும் சவால்களை நிவர்த்தி செய்வதற்கும் ஒரு தளமாகச் செயல்பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★